[7th November 1966

அரசாங்க மருத்துவ மனைகள்

*485 கேள்வி.—திரு. ம. கமலநாதன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கிருஷ்ணகிரி வட்டத் தலைநகரில் உள்ள ஆஸ்பத்திரியை விரிவாக்கும் வேலை எந்த அளவில் உள்ளது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கிருஷ்ணகிரியில் உள்ள அரசாங்க மருத்துவ மனையை விரிவாக்குவதற்குத் தேவைப்படுகிற நிலங்களை ஆர்ஜிதம் செய்வதுபற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

*486 கேள்வி.—திருமதி செகதாம்பாள் வேலாயுதம் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், ஜெயங்கொண்டத்தில் அரசாங்க பெரிய மருத்துவ மனை ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) ஜெயங்கொண்டசோழபுரம் அரசாங்க மருந்தகத்தை ஒரு மருத்துவ மனையாகத் தரம் உயர்த்த, இந்த நிலையத்தில் ஆண்கள் வார்டு ஒன்றையும் பெண்கள் வார்டு ஒன்றையும் கட்டுவதற்குப் பொது வான ஒப்புதலை அரசாங்கம் வழங்கியுள்ளது. இவ்வேலை குறித்த வரை படங்களும், மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

மருத்துவக் கல்லூரிகளில் இடங்கள்

*487 கேள்வி.—திரு. ம. கமலநாதன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புதிதாக அமைக்கப்பட்ட தருமபுரி மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரிக்கு எத்தனை இடங்கள் ஒதுக்கப்பட்டன ?

(இ) எத்தனை மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர் ?

(உ) வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று விண்ணப்பித்துள்ளதாக கனம் அமைச்சருக்கு முன்கூட்டியே புகார்கள் எவையேனும் வந்துள்ளனவா ?

(எ) ஆம் எனில், அவைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) 31 (General Pool—22, Backward Classes—9).

(b) 109.

(c) & (d) Complaints in this regard were brought to the notice of the Government. The mater is under investigation.